[1973 நவம்பர் 22

Damages to Anicuts due to rains.

* 45. *Q.*—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru S. VELLAPANDIAN) ; Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the details of the anicuts which have suffered damages due to rains during November–December 1972; and

(*b*) the extent of the damage ?

மழையினால் சேதமடைந்த அணைக்கட்டுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஆம் ஆண்டில் நவம்பர்-டிசம்பர் திங்களில் பெய்த மழையினால் சேதமடைந்த அணைக்கட்டுகளின் விவரங்கள் யாவை ?

(இ) சேதத்தின் மதிப்பு எவ்வளவு ?

The Hno. Thiru P. U. SHANMUGAM : (*a*) *aand* (*b*) A paper is placed on the Table of the House.

திரு. எஸ். எஸ். தென்னரசு : *தலைவரவர்களே, வெள்ள நிவாரண நிதிக்கு மத்திய அரசிடத்தில் நமது அரசு எவ்வளவு கேட்டது, அதற்கு அவர்கள் எவ்வளவு தருவதாக வாக்கு அளித்தார்கள், எவ்வளவு கொடுத்தார்கள் என் பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *தலைவரவர்களே, நாம் நிவாரண நிதியாக மத்திய அரசிடம் 30.16 கோடி ரூபாய் கேட்டோம். மத்திய அரசு 13.25 கோடி ரூபாய் கொடுப்பதாக ஒத்துக்கொண்டது. ஆனால் இதுவரையில் கடனாக 3.89 கோடி ரூபாயும், மானியமாக 87 லட்சம் ரூபாயும்தான் கொடுத் திருக்கிறார்கள். மிச்சம் கொடுக்க வேண்டிய பணத்தை அவர்கள் கொடுப்ப தாகத் தகவல் ஏதும் வரவில்லை. இருந்தாலும் நாம் மத்திய அரசைக் கேட் டுக்கொண்டிருக்கிறோம்; அவர்கள் கொடுப்பார்களா என்று சந்தேகமாக இருக்கிறது.*

திரு. செ. முத்துசாமி : *தலைவரவர்களே, இந்த 'வெல்ல' நிவாரண நிதித் திட்டத்தில் . . . .*

மாண்புமிகு மேலவைத் தலைவர் : *'வெல்லம்' இல்லை 'வெள்ளம்'.*

@ 208–203 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 நவம்பர் 22]

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, வெள்ள நிவாரணத் திட்டத்திலே, ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள், டெண்டர் விட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைகள், மத்திய அரசிடமிருந்து நிதி வராத காரணத்தால், கைவிடப்படும் நிலையில் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மத்திய அரசு கொடுப்பதாகச் சொன்ன தொகையில் பெரும் பகுதியைக் கொடுக்கவில்லை. எனினும் துவக்கப்பட்ட வேலைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, தமிழக அரசே மிச்ச வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான நிதியையும் நமது அரசே கொடுக்க வேண்டியுள்ளது. ஒத்துக்கொண்ட பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் கொடுப்பார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழில் சோதனையாக 'ள்' இருக்கிறது.

Construction of a Barrage across in Virisuzhi River in Thiruppathur Taluk

* 46. *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government for the construction of a barrage across the Virisuzhi river in K. Vairavanpatti, Meyapatti, Thiruppathur taluk, Ramanathapuram District; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

திருப்பத்தூர் வட்டம், விரிசுழி ஆற்றில் தடுப்பு அணை.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கே. வைரவன்பட்டி, மெய்யப்பட்டி கிராமம் விரிசுழி ஆற்றில் தடுப்பு அணை கட்டுவது பற்றி அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?